

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.5.2023) சிங்கப்பூர் நாட்டின் செம்ப்கார்ப் (Sembcorp) நிறுவனத்தின் தலைமை செயல் அலுவலர் கிம்யின் வாங்க் அவர்களை சந்தித்து, தமிழ்நாட்டில் தொழில் முதலீடுகள் செய்திட வேண்டுமென்று கோரிக்கை விடுத்து, சென்னையில் 2024 ஜனவரி மாதம் நடைபெறவுள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் கலந்து கொள்ளவும் அழைப்பு விடுத்தார். தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கிருஷ்ணன், சிங்கப்பூர் நாட்டிற்கான இந்திய தூதர் பெரியசாமி குமரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



சென்னையில் 2024 ஜனவரி மாதம் நடைபெறவுள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கு அழைப்பு விடுக்கும் வகையிலும், தமிழ்நாட்டிற்கு முதலீடுகளை ஈர்க்கும் நோக்கிலும், சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் நாடுகளுக்கு அரசு முறைப் பயணம் மேற்கொண்ட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (23.5.2023) சிங்கப்பூர் விமான நிலையத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, சிங்கப்பூர் நாட்டிற்கான இந்திய தூதர் பெரியசாமி குமரன் ஆகியோர் மலர்க்கொத்து வழங்கி வரவேற்றார்கள். உடன் தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கிருஷ்ணன் ஆகியோர் உள்ளனர்.

# ஆவின் நிர்வாகத்தில் கடுமையான கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்!

## பால்வளத் துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் உறுதி

சென்னை, மே 25 - பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் 22-05-2023 அன்று அம்பத்தூர் பால் பண்ணையில் திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

சென்னை அம்பத்தூர் மற்றும் சோழிங்கநல்லூர் ஆவின் பால் பண்ணைகளில் கடந்த மூன்று நாட்களாக பால் வினியோகம் தாமதமாக நடைபெறுவதாக ஊடகங்களில் செய்தி வெளிவந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு 9 மணி முதல் 11 மணிவரை அம்பத்தூர் ஆவின் பால் பண்ணையில் பால்வளத் துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் திடீர் ஆய்வு மேற்கொண்டார்.



அரசு முறைப் பயணமாக சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் நாடுகளுக்கு செல்வதையொட்டி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (23.05.2023) முகாம் அலுவலகத்தில், நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, கௌதம சிகாமணி எம்.பி., நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் டி.கே.எஸ்.இளங்கோவன், அண்ணா அறிவாலய மேலாளர் ஆர்.பத்மநாபன், அண்ணா அறிவாலய துணை மேலாளர் என்.ஜெயக்குமார் ஆகியோர் சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர்.

தென் மாவட்டங்களிலிருந்து அம்பத்தூர் பால் பண்ணைக்கு கொண்டு வரப்படும் பால் டேங்கர் லாரியின் மேலே ஏறி பால்வளத் துறை அமைச்சர் மனோ தங்கராஜ் ஆய்வு செய்தார். டேங்கர் லாரிக்கு போடப்பட்ட சீல் முறையாக போடப்பட்டிருக்கிறதா எனவும் ஆய்வு செய்தார். பால் பதப்படுத்தப்படும் பிரிவு, தர கட்டுப்பாட்டு பிரிவு, பால் குளிரூட்டும் பிரிவு, பாலித்தீன் பைகளில் பேக்கிங் செய்யப்படும் பகுதி, பால் டப்களை சுத்திகரிக்கும் பகுதி, ஆவின் சந்தாதாரர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் பால் கொண்டு செல்லும் வாகனங்களையும், கணினி வாயிலாக போடப்பட்ட பில்களையும் ஆய்வு செய்தார். ஒப்பந்த ஊழியர்களின் வருகைப் பதிவேடு, பெயர் விவரம் ஆகியவற்றை கேட்டு அறிந்து ஆய்வு செய்தார். குளிர் பதப்படுத்தப்பட்டு பேக்கிங் செய்யப்படும் இடத்தில் பாலித்தீன் பைகளின் தரம் மற்றும் பேக்கிங் செய்யப்படும் கருவிகள் முறையாக வேலை செய்கிறதா எனவும் ஆய்வு செய்தார்.



திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் சாலையில் அமைந்துள்ள மன்னர் பேரரசர் பெரும்பிடுகு முத்தரையர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு அவரது 1348வது பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு தமிழ்நாடு பள்ளிக்கல்வித்துறை அமைச்சரும், மாவட்டக் கழக செயலாளருமான, அன்பில் மகேஸ் பொய்யாமொழி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் மாநகரக் கழகச் செயலாளர் மதிவாணன், மாவட்டத் துணைச் செயலாளர் செங்குட்டுவன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் வண்ணை அரங்கநாதன், கே.என்.சேகரன், லீலாவேலு, மூக்கன், செல்லையா, சந்திரமோகன், பகுதி செயலாளர்கள் மணிவேல், பாபு, மோகன், சிவக்குமார், செல்வம் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.





